மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்து இயக்க வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, சென்னைக்கு வரும் பேருந்துகளை திருத்துறைப்பூண்டி வழியாக இயக்குவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

23—

வணிக வரி அலுவலகக் கட்டடம்

***50358 திரு. து. முருகேசன்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டிலுள்ள வணிக வரித் துறை அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டில் வணிக வரித் துறை அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. செங்கல்பட்டு மற்றும் திருக்கழுக்குன்றம் ஆகிய இரண்டு இடங்களில் அமைந்துள்ள வணிக வரி அலுவலகங்களுக்காக 8,000 சதுர அடியில் தாலுகா அல்லது வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகத்திற்குட்பட்ட அரசு நிலம் அல்லது தாலுகா/வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தில் 4,000 முதல் 5,000 சதுர அடியில்

காலியிடம் இருக்குமாயின், அதனை வணிக வரித் துறைக்கு ஒதுக்குமாறு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரப்பட்டுள்ளது. அவ்வாறு ஒதுக்கும்பட்சத்தில், அவ்விடத்தில் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கோ அல்லது காலியாக உள்ள அரசுக் கட்டடங்களில் இடம் ஒதுக்கும்பட்சத்தில், அவ்விடங்களில் வணிக வரி உதவி ஆணையர், செங்கல்பட்டு மற்றும் திருக்கழுக்குன்றம் ஆகிய வரி விதிப்பு வட்ட அலுவலகங்களைக் கட்டித் தரவோ உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

24—

குடிநீர் வசதி

***45543 திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதி, நாய்க்கனேரிமலை ஏரியிலிருந்து ஆம்பூர் நகருக்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் 28-12-2015 அன்று துவக்கி வைக்கப்பட்ட வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்